PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 சித்திரை 29 றஜப் 28 இதழ் 90

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12—5—83

### யாழ். செயலகத்தில் நேற்று நடந்த மாநாடு:
## வாக்குச் சீட்டுக்கள் யாழ். செயலகத்தில் எண்ணப்பட வேண்டும் என்று கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாக நேற்று யாழ். அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில், ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் எவரும் கலந்துகொள்ளவில்லை. கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் நவலங்காசமசமாஜக் கட்சி, சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் சுமார் 15 பேர் கலந்துகொண்டனர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா தலைமையில் நடந்த இம்மாநாட்டில் உதவிதேர்தல் ஆணையாளர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள், கட்சி செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மாநகரசபை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகரசபைகளில் போட்டியிடும் 15 வேட்பாளர்கள் மட்டுமே இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தேர்தல் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்பட்டது.

வாக்குச் சீட்டு எண்ணும் வேலையை பாதுகாப்புக் கருதி, வாக்களிப்பு நிலையங்களில் நடத்தக்கூடாதென்றும், யாழ். அரசாங்க செயலகத்திலேயே தான் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்றும் வேட்பாளர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட

(8ம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி தேர்தலிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் வாபஸ்!

## வாக்களிக்க வேண்டாம் என்றும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதிலிருந்து வாபஸ் பெறுவதென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்றும் தமிழ்க்காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து வாபஸ் பெற்றுக்கொள்வது தொடர்பாகத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

''தமிழ்ஈழவிடுதலைப்போராளிகளின் உருக்கமான உணர்ச்சிவசப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அவர்களின் கருத்தை ஆர்வத்திற்குமதிப்பளித்து அ. இ. த. காங்கிரஸ் 1983 உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலிருந்து வாபஸ் பெறுகின்றது

''இத்தீர்மானத்திற்கமைய தமிழ்த் தேசிய இனம் எதிர் வரும் 18-ம் திகதி வாக்களிக்க வேண்டாம் என்று தயவாக வேண்டுகின்றோம்.''

## 9 அரசியல் கட்சிகள் மறியல் போராட்டம்
### நெடுமாறன், தங்கமணி உட்பட ஆறுயிரம் பேர் கைது!

சென்னை, மே, 11

தமிழ் நாட்டில் ஒன்பது அரசியல் கட்சிகள் கூட்டாக நடத்திய மறியல் போராட்டம் தொடர்பாக ஆறுபிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

ஜனதா பாதுகாப்பு முன்னணி தமிழ்நாடு முழுவதும் இந்த மறியல் போராட்டத்தை நடத்தியது. அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. மறியல் போராட்டம் அமைதியாக நடைபெற்றது.

சென்னை நகரத்தில் விதிக்கப்பட்ட தடையை மீறி ஊர்வலம் நடத்திய 1000 தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொள்வதாகவும், வரட்சி, மின் தடை, உணவு

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் காங்கிரஸ் மனு:
## 31-ம் திகதிக்கு ஒத்திவைப்பு
### தேர்தலை ஒத்திவைக்கும் கோரிக்கை நிராகரிப்பு

[கொழும்பு]

யாழ்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறைநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்களை நீக்கக் கோரி, தமிழ்க் காங்கிரஸ், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இம்மாதம் 31-ம் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜஸ்டின் அபயவர்த்தன, எச். டி. தம்பையா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது

மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏச் என் டி சில்வா, விசாரணை முடியும்

(8ம் பக்கம் பார்க்க)

# ''அரசுக்கு ஒரு சவாலாகவே தேர்தலில் குதித்துள்ளோம்!''
## யாழ். எம். பி. தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''இயக்கங்களுக்குச் சவாலாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணி போட்டியிடவில்லை இந்த அரசாங்கத்துக்குச் சவாலாகவே போட்டியிடுகின்றோம் ஆகவே இத்தேர்தலைப் பகிஷ்கரிக்காமல் எதிர் வரும் 18ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள்'' என்று யாழ் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர்விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாவாந்துறை சந்தை மைதானத்திற்கருகாமையில் நேற்று மாலை யாழ். மாநகரசபை வேட்பாளர் திரு செ. எட்வேட் தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்ற இடம் உதயசூரியனின் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திரு யோகேஸ்வரன் மேலும் பேசுகையில், தமிழ் மக்கள் இன்னல் மிக்க காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று கவலை தெரிவித்தார்.

''எங்களுக்குள் இருக்கும் குறைபாடுகளை நாங்களே

(8ம் பக்கம் பார்க்க)

### கவுணவத்தை வைரவர் கோவிலில்
# ஆடு, கோழி பலியிடுவதை தடைசெய்யக்கூடாது!
## ஆலய நிர்வாகி மனுமீது தீர்ப்பு

[மாவிட்டபுரம்]

கீரிமலை கருகம்பானை கவுணவத்தை வைரவர் ஆலயத்தில் பாரம்பரியமாக இடம்பெற்று வந்த ஆடு, கோழி பலியிடுவதைப் பொலிசார் தடைசெய்யக்கூடாது என்று மல்லாகம் நீதிவான் திரு சி. வி. விக்னேஸ்வரன் இவ்விடயம் தொடர்பான மனுமீது நடந்த விசாரணையைத் தொடர்ந்து தீர்ப்பளித்தார்.

இக்கோவிலில் ஆடு, கோழி பலியிடுவதைத் தொடர்ந்தும் அனுமதிக்கவேண்டுமென்று ஆலய நிர்வாகி ஆறுமுகம் வைத்தீஸ்வரன் என்பவர் தாக்கல் செய்த மனுமீது விசாரணை நடைபெற்றது.

பலியிடுவது சட்டரீதியாகத் தடைசெய்யப்படவில்லையென்றும் நீதவான் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்

மனுதார் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், எம். பத்மநாதன், சு. நடராசா, வி. எஸ். கணேசலிங்கம் ஆகியோர் ஆஜரா

(8ம் பக்கம் பார்க்க)

### ராஜசுந்தரம் மனுமீது
# இன்று விசாரணை

(கொழும்பு)

காந்தீய இயக்கத் தலைவர் டாக்டர் ராஜசுந்தரத்தை பனாகொடை இராணுவ முகாமில் இருந்து வேறிடத்திற்கும் மாற்றுமாறு அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இன்று விசாரணைசெய்யப்படும்.

சட்டத்தரணி எஸ் சி சந்திரகாசன் தாக்கல்செய்த மனுவில் கூறப்படுவதாவது:-

''நான் நீதிமன்ற உத்தரவின் பேரில் பனாகொடை முகாமிற்கு டாக்டர் ராஜசுந்தரத்தைச் சந்திக்கச் சென்றபோது அனுமதி மறுக்கப்பட்டது.

''அங்கு மாணிக்கம் தாசன். றொபர்ட் தாசன் ஆகியோர் நொண்டிக்கொண்டு வந்தார்கள்.

''ஒரு அறையிலிருந்து மற்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள "மேஸி பேர்குசன் 135" உழவுயந்திரம் விற்பனைக்கு உண்டு தொடர்பு விஜயகுமார், றெயில் ரோட், நந்தாவில் அம்மன் கோயிலடி, கொக்குவில். 7183

தமிழ், ஆங்கில புதிய, பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; நிர்வாகி – சங்கர் காட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 7011

ரியூட்டரி வாங்கு மேசை விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும் 37 [351] மணிக்கூட்டு வீதி கவிதாலயா ஸ்ருடியோ மேல்மாடி யாழ்ப்பாணம். 7195

5 ஸ்ரீ 9691 மிற்சுபிஸி 9 ஆசனங்களைக்கொண்ட ஜீப் விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ளது. ஏ. சோதிலிங்கம் 33, கச்சேரி கிழக்கு ஒழுங்கை அரியாலை யாழ்ப்பாணம், 7193

பலாலி ரோட் 2ம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு; K. கந்தசாமி 44/2 கொலிச் ரோட், நீராவியடி யாழ்ப்பாணம். 7199

## தேவை

யாழ். கே. கே. எஸ் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய கடையில் றெக்கோடிங் பார் போடக்கூடியவர்கள் தேவை. தொடர்பு: மஸ்ரி சேவிஸஸ் த டன்லப் ஸ்ரோஸ், 234 446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7202

புடவை வியாபாரத்தில் அனுபவம் மிக்க ஆண் விற்பனையாளர்கள் தேவை. விபரங்கட்கு நேரில் வரவும், சிமாட்டி ரெக்ஸ்ரைல் இல; 122 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7190

2 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடைய கொம் பேசிட்டர் தேவை. நேரடியாக தொடர்பு கொள்ளவும். விவேகானந்த அச்சகம் லிமிட்டெட் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7204

## விற்பனைக்கு

சொந்தப்பாவிப்பில் உள்ள சோமசெற் கார் உடன் விற்பனைக்குண்டு RG 32, பிறவுன் வீதி. யாழ்ப்பாணம். 7197

## தவறிவிட்டது

சவூதி அரேபியா வாகன லைசென்ஸ், Working permit ஆகியன தவறிவிட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: எஸ் சிறீகாந்தன் பிள்ளையார் எலெக்றிக்கல்ஸ் நவீன சந்தை வட்டுக்கோட்டை. 7201

## கல்வி

பொறியியல் கல்வி நிலையம் EngineeringEducation Centre) மோட்டார் மெக்கானிசம் வகுப்புகளை யாழ் நகரிலிக்கும் நிலையத்திற்கு சமீபமாக நடத்துகிறது. உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை. விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B.sc (Cey) Engineer Specialist in Electrical Machines. 7194

## விஞ்ஞான தின நிகழ்ச்சிகள் ஜூலையில்!

(புலோலி)

இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பாராளுமன்ற இடைத் தேர்தல்களை யொட்டி இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் அறிவியல் பரபுப் கனிஷ்ட சங்கத்தால் நடாத்தப்படவிருந்த விஞ்ஞானதின நிகழ்ச்சிகள் ஜூலை மாதம் வரை பின்போடப்பட்டுள்ளதாக விஞ்ஞானதின அமைப்பாளரும் யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறைப் பேராசிரியருமான திரு. வீ. கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட விஞ்ஞான மாணவர்களின் அறிவை மேம்படுத்துமுகமாக இவ் விஞ்ஞானதின நிகழ்ச்சிகளை இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் அறிவியல் பரப்பு கனிஷ்ட சங்கம் நடாத்தவுள்ளது.

வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23680

COLOMbo Studio

## 6 மாதப்பயிற்சி பூர்த்தி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை தாதியர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுவந்த பதினேழு மாணவ மருத்துவ தாதிகள் தமது 6 மாத பயிற்சியை பூர்த்தி செய்துள்ளனர்.

யாழ்ப்பாண தாதிமார் பயிற்சிப்பாடசாலையில் பயிற்சியை முடித்துவெளியேறிய மேற்படி 17 பேருக்கும் கடந்த 6 மாத காலமாக காங்கேசன்துறை தாதியர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

குடும்பசுகாதாரம், சுற்றுடல் சுகாதாரம், குடும்பநலம், தாய் சேய் நலம், தடுப்பூசி ஏற்றல் போஷாக்கு உணவு போன்ற பலதுறைகளிலும் இவர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டதுடன் வெளிக்கள பயிற்சியிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

## மீண்டும் தலைவர்

[மன்னார்]

மன்னார் ஒலைத் தொடுவாய் கிராமோதயசபைத் தலைவராக ஜனாப் எம் ஜவாத் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பிரபல வர்த்தகரான இவர் கரிசல் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத் தலைவராவார்.

## புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஐக்கியநண்புரிச்சங்கத்தின் 11ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு பி. க. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற போது புதுவருடஉத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: க. நடராசா, உப தலைவர்: வை செந்தில்நாதன் செயலாளர்; எஸ். குமாரசிங்கம் உபசெயலாளர்: செ பாலச்சந்திரன், பொருளாளர்: ச நல்லையா செயற்குழு உறுப்பினராக ஒன்பது பேர் தெரிவாகினர்.

(க)

## விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்**

90 பரப்புக் காணி
[கொழும்புத்துறை)
3½ பரப்பு காணி
[கொழும்புதுறை]
-ஐயனார் கோவில் வீதி
வீடு- கீழ்ப்பகுதி
கடையுடன்
(நாவாந்துறைக்குதெரு)
6 பரப்புகாணி
(A V. ரோட் அரியாலை)

**தின்னவேலி**

12 பரப்பு காணி
[கலாசாலை வீதி]

**மிருசுவில்**

11½ பரப்புக்காணி
(கண்டிவீதி)
40 பரப்புக்காணி
(தவசிக்குளம்)
29 பரப்புக்காணி
(பழைமவாய்க்கால்தெரு]

**பளை**

30 ஏக்கர் தோட்டம்

**உடுவில்**

9½ பரப்புக்காணி
4 பரப்பு காணி
[உடுவில் மானிப்பாய் வீதி)

**புன்னாலைக்கட்டுவன்**

12 பரப்புகாணி
(ஈவினை வீதி)

மேதிக விபரங்களுக்கு!

த பிறின்ஸ் கம்பனி லிமிற்றட்

(காணிப் பிரிவு)

249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23680

## மன்னாரில் தேங்காய்விலை திடீர் வீழ்ச்சி

மன்னார்)

மன்னாரில் தேங்காயின்விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.


இதுவரை காலமும் மன்னார் வாராந்தச் சந்தையில் ஒரு ரூபா 50 சதம் முதல் 2 ரூபா வரை விற்பனைசெய்யப்பட்டு வந்த தேங்காய் கடந்த சனி, ஞாயிறு நடைபெற்ற வாராந்தச் சந்தையில் 50 சதம் முதல் 75 சதம் வரை விற்பனை செய்யப்பட்டது.

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

### செல்வன் தி. நந்தகுமாரன்

[ஸ்ரான்லிக் கல்லூரி மாணவன்]

மலர்வு: 6-3-1964 உதிர்வு: 15-04-1983



அன்பே உருவான எமது குடும்பத்தெய்வம் இறைவனடி சேர்ந்ததையிட்டு 16-04-83 அன்றைய ஈமக்கிரியைகளில் நேரடியாகவும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதலளித்த அனைவர்களும் நன்றி நவில்வதோடு 13 – 05 – 1983 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

"அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்"

அன்புடன்

பெற்றோர், குடும்ப உறவினர், நண்பர்கள்

வைத்திராயன் தெற்கு, தாவடி. [7191]

## அந்தியேட்டியும் நன்றிநவிலலும்



### அமரர் திரு. தாமோதரம்பிள்ளை அம்பலம்

[பிரபல வர்த்தகர்]

மண்ணுலகு: 30-01-1918 விண்ணுலகு: 12-04-1983

அன்பின் திருவுருவாய் அருளின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் விளங்கிய எங்கள் குடும்பத்தலைவனின் ஈமக்கிரியைகளில் நேரில் கலந்தும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் மற்றும் உதவிகள் புரிந்தும் ஆறுதல் அளித்தமையோடு இன்று (12-05-83) வியாழக்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும் பங்குகொண்டு சிறப்பிக்கும் உற்றார் உறவினர், நண்பர்கள், யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

அன்னாரின் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நுணவை தெற்கு, மாதகல்.

12-05-83 [719+]

# இந்தியாவுக்கு இந்த ஆண்டு ராணுவச் செலவு ரூபா 967 கோடி!

## பிரிட்டன், பிரான்ஸிடமிருந்தும் தளபாடங்கள்!

புதுடில்லி, மே 11

இந்தியா இந்த ஆண்டில் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான இராணுவ தள பாடங்களைக் கொள்வனவு செய்யவிருக்கின்றது. இத்தகவலை பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"இந்த ஆண்டு இந்தியா ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கெனச் செலவிடவுள்ள தொகை 967 கோடி ரூபாய்களாகும்" என்று அவர் கூறினார்.

இந்தியா இதுவரை காலமும் தன் நெருங்கிய நேச நாடான சோவியத் யூனியனிடமிருந்தே இராணுவத் தளபாடங்களைப் பெற்றுவந்தது. ஆனால் இந்த ஆண்டு பிரான்ஸ், பிரிட்டன் ஆகியனவற்றிடமிருந்தும் அது தனது இராணுவத் தளபாடங்களைப்பெற்றுக் கொள்ளும்.

பிரான்ஸிடமிருந்து நவீன போர்விமானமான 'மிராஜ்' ரக போர் விமானங்களையும், பிரிட்டனிடமிருந்து ஹரியர்' ஜெட் விமானம் உட்பட வேறு சில உபகரணங்களையும் இந்தியா பெற்றுக்கொள்ளும்.

ஆர்ஜன்டீன படைகள் உபயோகித்த பிரெஞ்சு 'மிராஜ்' விமானங்களே போக்லண்ட் போரில் சில பிரிட்டிஷ் கப்பல்களை மூழ்கடித்தன, அன்றிலிருந்து 'மிராஜ்' விமானங்கள் பிரபல்யம் அடையத் தொடங்கின என்பது குறிப்பிடத்தக்கது

பிரிட்டனின் 'ஹரியர்' ஜெட் விமானங்களும் மிக நவீன தாக்குதல் முறைகளைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது

இந்தியாவின் இந்த ஆண்டுக்கான போர்ச் செலவீனங்களில் விமானப் படைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது அவசியமேற்படின் அணுசக்தி நீர்மூழ்கிகளையும் பெற்றுக்கொள்ள இந்தியா முன்வரும் என்று பாதுகாப்பமைச்சர் முன்பொருதடவை தெரிவித்திருந்தார். (இ)

## தமிழக பொலிஸ்துறையின் நடமாடும் வைத்திய பிரிவு!

சென்னை, மே 11

தமிழ்நாடு பொலிஸ் திணைக்களம் வீதிவிபத்துக்களில் பாதிப்படைவோருக்கென நடமாடும் வைத்தியப் பிரிவொன்றை அமைக்கவுள்ளது.

தமிழ்நாடு பொலிஸ்துறை உயர் அதிகாரி கே. இராதா கிருஷ்ணன் இந்த நடமாடும் வைத்தியபிரிவு குறித்து யோசனைகள் சிலவற்றைத் தெரிவித்துள்ளார்

வீதி விபத்துக்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கையைக் குறைக்கவும், காயப்படுவோருக்கு உடனடி ஸ்தல சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையிலுமே இந்த நடமாடும் வைத்தியப்பிரிவை தமிழக பொலிஸார் ஆரம்பிக்கவுள்ளனர் என்று அவ் யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் அதிகாரி இராதா கிருஷ்ணன், தமிழகத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மேலும் அதிகளவு வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்று தெரிவித்தார். அத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்படும் பொலிஸ் நிலையங்களுக்கு தனியான வரவேற்பறைகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார் [இ]

## தொழிலாளர் தினவிழா

(மன்னார்)

மன்னார் பாலைப்பிட்டி கிராமோதய சபைகளின் ஆதரவுடன் இம்மாதம் 15ம் திகதி தேவாபுரத்தில் தொழிலாளர் தினவிழா நடைபெறும்,

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு வி முருகையா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பழைவீமன்காமம் பாவனையாளர் சங்க தீர்மானம்

[மாவிட்டபுரம்]

"லீற்றர் அளவு போத்தல் புளக்கத்திற்கு விடப்படாமையால் எண்ணை அளவுகளில் தொடர்ந்தும் மோசடிகள் இடம்பெற்றுவருகிறது இதனால் பாவனையாளர் பெரிதும் சுரண்டப்படுகின்றனர். ஆகவே லீற்றர் அளவு போத்தல்களை பாவனைக்குவிட ஆவன செய்யவேண்டும்"

இவ்வாறு யாழ் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளரைக் கோரும் தீர்மானமொன்று பழைவீமன்காமம் பாவனையாளர் சங்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது இத் தீர்மானத்தில் கீழ்வரும் கோரிக்கைகளும் இடம்பெறுகின்றன.

இப்பகுதி பேக்கரிகளில் பாண் நிறை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே அதனைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்,

தெல்லிப்பழை ஆட்டிறைச்சிக் கடையில் விலைப்பட்டியல் வைக்கப்படவில்லை விலை கூட்டியும் விற்கப்படுகிறது. ஆகவே இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்

பழைவீமன்காமம் பகுதியில் சில கடைகளில் சீனி விலை கூடுதலாக விற்கப்படுகிறது. அவற்றை கண்காணிக்கவேண்டும்.

மற்றும் பல விடயங்களும் ஆராயப்பட்டன. [இ]

## 'வாணவேடிக்கை' 30 பேரை பலியெடுத்தது!

மெக்ஸிக்கோசிட்டி, மே 11

மெக்ஸிக்கோவில் உள்ள 'இக்ஸ்டபலுக்கா' என்ற இடத்தில் 'வாணவேடிக்கை'க்காக வைக்கப்பட்டிருந்த வாணங்கள் தவறுதலாக வெடித்ததால் 30 பேர் பலியானார்கள். 250 பேர் காயமடைந்தனர்.

தேவாலய உற்சவமொன்றை முன்னிட்டே இந்த வாணங்கள் வைக்கப்பட்டிருந்தன திடீரென இவ் வாணக் குவியலுக்கு மேல் ஏற்பட்ட தீயே இவ் விபத்துக்குக் காரணமாகும்.

இப்பெரும் பயங்கர உயிர்ச்சேதம் ஏற்பட்ட 'இக்ஸ்டபலுக்கா' நகரம் மெக்ஸிக்கோவின் தலைநகரிலிருந்து 20 மைல்கள் தொலைவில் இருக்கின்றது, கடந்த செவ்வாய்க்கிழமை இரவே இவ்விபத்து ஏற்பட்டது. [இ]

## இந்தியாவில் பெருமளவு அரசியல் படுகொலைகள்!

### பிரிட்டன் எம். பி. அறிக்கை!

லண்டன், மே. 10

இந்தியாவில் அரசியல் படுகொலைகள் பெருமளவில் இடம் பெறுவதாக பிரிட்டனின் தொழிற்கட்சி எம். பி. ஒருவர் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்

100 அங்கத்தவர்களின் கையெழுத்துடன் சமர்ப்பித்திருக்கும் இந்த அறிக்கையில் உலகத்தில் அரசியல்படுகொலைகள் நடைபெறும் 26 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக சேர்க்கப்பட்டிருக்கின்றது

இது குறித்துலண்டனிலிருக்கும் இந்தியத்தூதுவர் கடும் ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன் இப்பட்டியலில் இருந்து இந்தியாவின் பெயரை நீக்கி விடும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். [கு]

## அபிப்பிராய வாக்கெடுப்பு தட்சருக்குச் சாதகம்!

லண்டன், மே 11

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு அபிப்பிராய வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டது. இதில் பிரதமர் திருமதி மாரிகிரெட் தட்சரின் கன்சர் வேட்டிவ் கட்சிக்கே கூடுதல் ஆதரவு இருப்பது தெரியவந்துள்ளது

பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சித் தலைவர் திரு மைக்கேல் பூட் இப்போதுத் தேர்தல் பற்றிக் கருத்துத்தெரிவிக்கையில், தற்போதைய அரசின் ஆட்சிக்காலம் நிறைவடைய ஒரு வருடம் இருக்கும் போதே ஆளும் கட்சி பொதுத்தேர்தலை நடத்த முன்வந்துள்ளதுஎன்று தெரிவித்ததுடன் தமது கட்சி இப்பொதுத்தேர்தலைச்சந்திக்க தயாராகவுள்ளதென்று குறிப்பிட்டார்

பிரதமர் திருமதி தட்சர் பொதுத்தேர்தல் நடைபெற விருப்பதை மகாராணியாரிடம் தெரிவித்துள்ளார் அத்துடன் பாராளுமன்றத்தையும் கலைக்கும்படி அவரைக் கேட்டுள்ளார். [இ]

## ஈரானில் ஆயிரம் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டுகள் கைது!

தெஹ்ரான், மே 11

ஈரானில் சிலவாரங்களுக்கு முன்னர் தடைசெய்யப்பட்ட சோவியத்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் கைதாகியுள்ளனர்

ஈரானில் சோவியத்தின் உதவியுடன் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர் என்பதே இவர்கள் மீதான குற்றச்சாட்டு.

கடந்த பெப்ரவரியிலும் இக்கட்சியைச் சேர்ந்த சிலர் ஈரானில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

தற்போது கைதுசெய்யப்பட்டவர்களில் பலருக்கு கடந்த வாரம் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட 18 சோவியத் ராஜதந்திரிகளுடன் அந்தரங்கத் தொடர்புகள் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது,

ஈரானிலிருந்தும் வெளியேற்றப்பட்ட சோவியத் ராஜதந்திரிகள் ஈரானில் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ)

## துன்னாலை பாலசிங்கம் மரணம் கொலை எனத் தீர்ப்பு

[புலோலி]

துன்னாலை பாலசிங்கத்தின் மரணம்கொலை எனத் தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதவான் திரு கே. கணபதிப்பிள்ளை இக்கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு கொலைஞர்களைக் கைது செய்யுமாறு பருத்தித்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலையைச் சேர்ந்த இளையதம்பி பாலசிங்கம் என்பவர் மனைவி மக்களைப்பிரிந்து தனியே வீட்டில் வசித்துவந்த போது கடந்த 29ம் திகதி நள்ளிரவு யாருமற்ற வேளையில் பயங்கரமாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்; நெஞ்சில் வெட்டப்பட்டகாயத்தின் ஊடாக சுவாசப்பையெளியே வந்திருந்தது ஆணுறுப்பு வெட்டப்பட்டிருந்தது.

இவரின் மரணம் சம்பந்தமான ஸ்தல விசாரணைகளைப் பருத்தித்துறை நீதவான் திரு கே கணபதிப்பிள்ளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே மயில்வாகனம் பெருமாள் பிரேதபரிசோதனை செய்து சாட்சியமளித்ததைத் தொடர்ந்து பாலசிங்கத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்த நீதவான் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு கொலைஞர்களைக் கைது செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## "இகவாழ்வின் பயனை வீடு அடைதல்"

புங்குடுதீவு)

"கடவுள் பக்தர்களின் நோக்கம் மோட்சத்தை அடைய வேண்டுமென்பதில்லை இந்த உலகத்தில் சுகமாகவும், மகிழ்வாகவும் வாழ்வதே அவர்கள் குறிக்கோள். கடவுளும் நம்மை மோட்சத்திற்கு அழைக்கும் விருப்பம் உடையவனல்லன். மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே என்றும், வான்பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளல் என்றும் மணிவாசகர் கடவுளை விளக்கப்படுத்தியுள்ளார்"

இவ்வாறு புங்குடுதீவுகிழக்கு கண்ணகை அம்மன் கோவிலில் நடந்த விசேட வழிபாட்டில் சிறப்புரை நிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார். திரு இரா. இராசகுமார் வரவேற்புரை நிகழ்த்திய இவ் விசேட வழிபாட்டினை கண்ணகைபுரம் சைவ இளைஞர்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

புலவர் சிவானந்தன் தொடர்ந்து பேசுகையில்,

"மண்ணகத்து வாழ்க்கை

[7ம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் நிலையத்தில் பெண்மரணம் தனிநபர் ஆணைக்குழு விசாரணை!

சென்னை, மே 11

சேலம் மாவட்டத்தில் கிச்சிலாப்பாளம் என்ற இடத்திலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் ஆதிதிராவிட பெண்ணொருவர் இறந்தது குறித்து விசாரிக்க தனிநபர் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு மாநில அரசு இந்த ஆணைக்குழுவை அமைத்தது. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எல். எம் நஞ்சப்பன் இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்

மூன்றுமாதகாலத்தில் இந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. கிச்சிலாப்பாளம் பொலிஸ்நிலையத்தில் இறந்த ஆதிதிராவிடப்பெண் தெய்வமணி என அழைக்கப்பட்டார் இவர் இறக்கமுன்னர் கற்பழிக்கப்பட்டிருந்தார் என்றும் புகார் செய்யப்பட்டிருந்தது

எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களில் ஏற்படும் மரணங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் வகையிலேயே இவ்விசேட தனிநபர் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்தது [இ]

மணிவாக்கு

ஒருவர் கதையைக் கேட்டு இருவர் மேல் தீர்ப் பளிக்காதே!

—கிரேக்க பழமொழி

## நமது நோக்கு

## தாட்சரின் அவசரத்தேர்தல்

1979-ம் ஆண்டு மே மாத நடுவில் இல 10, டவுனிங் தெருவில் பிரிட்டனின் முதற்பெண் பிரதமராக அமர்ந்த திருமதி மார்கரற் தாட்சர் இவ்வாரமே பாராளுமன்றத்தைக் கலைக்க முடிவு செய்துள்ளார். சரியாக ஒரு வருடத்துக்கு முன்னரேயிது தெளிவு.

புதிய பாராளுமன்றக் கூட்டம் ஜூன் மாதம் 22ம் தேதி கூடுமெனப் பேசப்படுகிறது.

சோதிடம் பார்க்காத எவரும் இக் காலத்தில் இல்லையென்றாலும், பிரிட்டிஷ் பிரதமர் பெண்ணாயிருந்தபோதும் பஞ்சாங்கம் பார்த்து சுப தினத்தைத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அவருடைய கன்சர்வேட்டிவ் கட்சி பிரமுகர்களின் ஒற்றுமைப்பட்ட கருத்து ஜூன் மாதமே உகந்தகாலமென்பது!

மீண்டும் வெற்றிபெற்று ஆட்சிக்கு வருவது மட்டுமல்ல, தொழிற்கட்சியை நிர்மூலமாக்கி, மற்றைய சோஷலிச ஜனநாயகக்கட்சியையும், லிபரல் கட்சியையும் படுதோல்வியடையச் செய்வது முக்கியமானதும் நிச்சயமானதுமென ஆளும் கட்சிப்பிரமுகர்கள் ஆசை சம்படுகின்றனர்.

நான்கு வருடங்களுக்கு முன் பிரதமர் பதவியைப் பெற்ற திருமதி தாட்சர் பாராளுமன்றத்தில் பெரும் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டது பிரிட்டிஷ் பாராளுமன்றமரபின் பெருமையைக் குறிக்கின்றது.

தடிப்பான கன்சர்வேட்டிவ் தலைவியென்றும், சண்டைக்கஞ்சாத 'இரும்புப் பெண்' என்றும் வர்ணித்திருந்தபோதும் அம்மாபெரும் பதவியில் அவர் எவ்வித தீவிர போக்குகள் எதனையும் வெளிப்படுத்தாது சபையின் மதிப்பைத் தம்முடைய பண்பாட்டின் பெருமையால் கவர்க்கூடியதாகவிருந்தது.

நான்கு வருடங்களில் பெண் பிரதமர் அனுபவித்த ஏற்றமும் இறக்கமும் தோல்விகளும் வெற்றிகளும் சாதாரண ஒரு பெண்மணிக்குப் பெரும் தயக்கம் அளித்திருக்கும். இருப்பினும் பிரிட்டனின் சாதாரண இல்லக்கிளத்தியின் பெருமைக்கு அவர் தகுந்த பிரதிநிதியென்றே சொல்லவேண்டும்.

பிரிட்டிஷ் அரசியலில் அனுபவம் வாய்ந்தவர்; பிரிட்டிஷ் பொது மக்களின் மனப் போக்கை நன்கறிந்தவர். எடுத்த விடயத்தை எவ்வித தயக்கமுமின்றி கடும் உழைப்புடன் நிறைவேற்றும் ஆற்றல் பெற்றவராகையால் பிரிட்டிஷ் பெண் சமூகத்தின் நல்மதிப்புடன் கடந்த நான்கு வருடங்களை வெற்றிகரமாகக் கழித்துவிட்டாரெனலாம். கொள்கை உறுதியுடைய வரானதையில் ஆண் சமூகத்தின் ஆதரவும் இருந்தது.

பிரிட்டிஷ் பொதுமக்கள் தீவிர அரசியலை விரும்பாத சமூகத்தினர்; முற்போக்கு வாதிகளை ஆதரிக்க அஞ்சாதவர்களானாலும் பழமையைப் பேணுவதில், மரபு வழிவாழ்வதில் பெரு நம்பிக்கை கொண்டவர்கள்.

தொழிற்கட்சி — அதன் தீவிரவாதம் பிரிட்டிஷ் தொழிலாள சமுதாயத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது; வரலாற்றும் பெருமை பெற்றது. இருப்பினும் அப்பெருங்கட்சி திருமதி தாட்சரின் ஆட்சி ஆரம்பத்திலேயே இரண்டாகப்பிரிய நேரிட்டமை பிரிட்டிஷ் மக்களின் பழமை சாரும் பண்பை அத்திபாரமாகக்கொண்ட காரணத்தினாலெனலாம்.

இரண்டு பட்டிகளுக்கும் தொழிற்கட்சியும் சோஷலிச ஜனநாயகக்கட்சியும் இன்றைய அரசியல் நிலையில் கன்சர்வேட்டிவ் கட்சியாகிய ஆளும் கட்சியை தோற்கடிக்கும் சாத்தியம் அதிகம் இல்லை; ஒரு வருடத்துக்கு முன்னரே பொதுத்தேர்தல் நிகழ்வது ஒரு சந்தேகமான காரியம். ஆனால் இன்றைய பிரதமருக்கு கூடிய ஆதரவு உண்டு.

எதிர்க்கட்சிகள் இச் சடுதியான தீர்மானத்தைஎதிர்ப்பது இயற்கை. திருமதி தாட்சர் நீண்டகாலம் பெரும் கண்டனத்துக்காளாயிருந்ததும் உண்மை. ஆபத்தமற்ற நிலையில் அவர்களை மடக்கிவிடும் செயல் இதுவென அவர்கள் நினைக்கலாம்.

வேலையில்லாமை, தொழிலாளிகளின் வேதனைப் பிரச்னை, உலக விவகாரங்களில் முதலாளித்துவ நாடுகளுக்கு மட்டற்ற ஆதரவு, நீண்டகால பொருளாதார மந்த நிலை—இவையெல்லாம் திருமதி தாட்சரின் நான்கு வருட ஆட்சியில் தலைதூக்கி நின்றன, போக்லந்துப் போர்—அதன் வெற்றி ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது.

635 அங்கத்தவர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு 36 மேலதிக வாக்கே இருந்து வந்ததால், பலவீனமடையும் தருணங்களில் "பொதுத்தேர்தல்" என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

புலி, புலியென்று, இன்று வந்திருக்கும் பிரிட்டிஷ் பொதுத்தேர்தலாகிய புலி, பிரதமருக்குப் பலமளிக்குமென கட்சிப் பிரமுகர்கள் நம்புகின்றனர். ஆனால் ஏமாற்றமடையஇடமுண்டு

எதிர்க்கட்சிகள் அவருக்குத் தோல்வியே கிடைக்குமென்றும், ஒரு வருடத்தை அநியாயமாகப் பணயம் வைத்திருப்பதற்கு அச்சமே காரணமென்றும் 'கண்ணீர்' வடிக்கின்றனர்; ஆடு நனையும் கதை!

அபிப்பிராயவாக்கெடுப்பு ஆளுங்கட்சிக்கு சாதகமாகவுள்ளது; ஆனால் பிரிட்டிஷ் வாக்காளரின் மனப்போக்கு எவ்வகையிலும் முன்கூட்டி அறியக் கூடிய பண்டமல்ல.

இவ்வித தேர்தலில் சூதாட்டத்துக்குரிய அபாய அம்சமிருந்த போதும் பிரிட்டனில் பரவிவரும் அரசியல் அமைதியின்மைக்கு இது ஒரு முடிவு காண உதவலாம்.

# 10 லட்சம் வீடுகட்டும் திட்டம்; கருத்தரங்கில் விளக்கம்

[10 லட்சம் வீட்டுத் திட்டம் குறித்து பலை வீமன்காமம் கிராமோதய சபை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடத்திய ஆய்வுக் கருத்தரங்கில் யாழ். தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஆளணி உதவியாளர் (நிர்வாகம்) திரு. கே. இன்னராஜா கலந்துகொண்டு அளித்த விளக்கத்தின் தொகுப்பு இது. கருத்தரங்குக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமைவகித்தார்.]

[மாவிட்டபுரம் நிருபர்]

வீடில்லாத மக்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் பிரதமரின் திட்டத்தின் பிரகாரம் 1979ம் ஆண்டு முதல் 5, 10, 25, 30, என்ற வீடமைப்பு திட்டங்கள் தொகுதிரீதியாக மேற் கொள்ளப்பட்டுவந்தன. முதலில் அரசாங்கமே வீடுகளை அமைத்து பாராளுமன்றஉறுப்பினர்களது சிபாரிசுடன் வீடில்லாதவர்களுக்கு வீடு வழங்கப்பட்டன. பின் சுய உதவி வீடமைப்பு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. அரசாங்கம் வீடு அமைப்பதற்கான பொருட்களை வழங்க வீட்டைப் பெறுபவர்களே தமது கண்காணிப்பில் தமக்கு வசதியாக வீட்டை அமைத்துக்கொள்ள அதன் மூலம் வழிவகுக்கப்பட்டிருந்தது. மாதிரிக்கிராமங்களும் இந்த அடிப்படையிலேயே அமைக்கப்பட்டன.

### மாறுபட்டது

ஆனால் இன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள 10 லட்சம் வீட்டுத்திட்டம் முற்றிலும் மாறுபட்டதாகும். இத்திட்டத்தில் காணி உள்ளவர்களுக்கு கடன்வழங்கி அவர்கள் வீடுகளை அமைத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் காணியில்லாதவர்களுக்கு முடிக்குரிய காணிகளோ, பயன்படுத்தப்படாமலிருக்கும் காணிகளோ இருந்தால் அவற்றை பெற்றுக்கொடுத்து அங்கு வீடுகளை அமைத்துக்கொள்ள வசதி உண்டு. இத்திட்டத்தின்படி கடனைப்பெற்று வீடுகளை மட்டுமன்றி மலகூடம் மைத்தல், குடிநீருக்காக கிணறுதோண்டல், வீட்டை விஸ்தரித்தல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தலாம்.

### பாகுபாடின்றி செய்யவேண்டும்

இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் கிராமோதயசபைகளின் பங்கு அவசியமானது. கிராமமக்களது நிலையை மதிப்பீடுசெய்து தகுதியான 250 பேர்களை தெரிவு செய்து முன்னுரிமைப்படி பட்டியல் தயார்செய்து பிரதேசசபைக்கு சமர்ப்பிப்பது கிராமோதயசபையின் கடமையாகும். அரசியல் தலையீடோ, பாரபட்சமோ, சோபதாபமோ எதுவுமின்றி நேர்மையான முறையில் கிராமோதய சபை இதனைமேற்கொள்ள வேண்டும் கிராமோதயசபைகள் தயாரித்தபட்டியலை பிரதேசசபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த பட்டியலில் முன்னுரிமைப்படி 250 பேரின் பெயர்களை சிபாரிசு செய்து அவர்களின் தேவைகளையும் குறிப்பிடவேண்டும். வீடு அமைப்பது வீடு விஸ்தரிப்பு, இணறு அமைத்தல் மலகூடம் அமைத்தல்போன்ற தேவைகளை குறிப்பிடலாம்.

இந்த பட்டியலை பிரதேச சபை உபகுழு ஆராய்ந்து இந்த ஆண்டில் பரீட்சார்த்தமாக இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக ஒருவரை தெரிவு செய்யும் கிராமோதயசபைகளின் பட்டியலில் முதலாவதாக உள்ளவர்களின் விபரங்களை ஆராய்ந்து அவர்களில் ஒருவரை தெரிவுசெய்து அவருக்கு இவ்வாண்டு கடன்வழங்கப்படும். பிரதேசசபைக்கு ஒரு வீடு என்ற வகையிலேயே இப் பரீட்சார்த்த வீடு அமைப்பு இவ்வருடம் இடம்பெறும். ஏனையோருக்கு 84ம் ஆண்டு ஜனவரியிலிருந்து கடன் வசதிகள் செய்யப்படும்.

ஒருவருக்கு ஆகக்கூடியது 7500 ரூபாவே திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இக்கடனைப் பெறுபவர் இலங்கை பிரஜையாக இருக்கவேண்டும். 50வயதிற்கு உட்பட்டிருக்கவேண்டும். மாதவருமான 300 இலிருந்து 1000 ரூபாவிற்குள் இருக்கவேண்டும் கடனை பெறுபவர் அரச ஊழியராயிருந்தால் 750ரூபா சம்பளம்உள்ள ஒருவர் பிணை நிற்கவேண்டும். அரச ஊழியர் அல்லாவிடில் 1000 ரூ சம்பளம்உள்ள ஒருவர் பிணைநிற்கவேண்டும். 5000 ரூபா கடன் பெற்றால் 3 வீத வட்டியுடன் 15 வருடத்திற்குள் திருப்பிசெலுத்தலாம். 7500 ரூபா பெற்றால் 6 வீத வட்டியுடன் 15 வருடத்திற்குள் திருப்பிசெலுத்தலாம். 5வருடத்திற்குள் செலுத்தவும் வசதிசெய்யப்படும்.

முன்னைய வீடமைப்புத்திட்டங்களில் அரசாங்கம் கட்டிக்கொடுத்த வீடுகளே மக்களுக்குவழங்கப்பட்டன. ஆனால் 10 லட்சம் வீட்டுத்திட்டத்தில் மக்கள் தாம் விரும்பியபடி குறைந்த செலவில் வீடுகளை அமைத்துக் கொள்ளமுடியும். சீமெந்தினால்தான் வீடுகட்ட வேண்டும் என்பதல்ல. உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தமக்கு விருப்பிய முறையில் வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.

வீடமைப்புத் திட்டங்களை பொறுத்தவரை காணி பெறுவதே பிரச்னையாகஇருக்கிறது. அரச காணிகளோ, பாவிப்பாரற்ற காணிகளோ இருந்தால் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு தெரியப்படுத்த கிராமோதய சபைகள் முன்வர வேண்டும். நாம் அவற்றை கையேற்க ஆவனசெய்வோம்.

மக்கள் கருத்து

## மத்திய கிழக்குச் செல்லும் பனங்கட்டி

தங்களது 08-05-83ம் திகதிய பத்திரிகையில் 1ம் பக்கத்தில் "யாழ்ப்பாணப் பனங்கட்டி மத்திய கிழக்குச் செல்கிறது" என்ற தலையங்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விடயத்தினை வாசித்தேன்

நான் 1977ம் ஆண்டு தொடக்கம் அல்வாயில் ஓர் பனங்கட்டித் தொழிற்சாலையினை நடாத்தி வருகின்றேன்.

24-04-83ல் யாழ். திருநெல்வேலி பண்ணையில் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை தலைவர் திரு. சு. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் ஏ. கந்தசாமி (118 டாம் வீதி, கொழும்பு. 12) கா. சரவணபவன் (375, டாம் வீதி, கொழும்பு, 12) ஆகிய இருவரும் தங்களுக்கு மத்திய கிழக்கிற்கு அனுப்புவதற்கு 1500 பெட்டி பனங்கட்டி தேவையாயிருக்கிறதென்றும், அவற்றை யாழ். பனம் பொருள் அபிவிருத்தி சபையின் வாகனத்தில் தங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டதன் பிரகாரம் நான் 3-5-83 இல் அவற்றை ப. பொ. அ. சபையின் வாகனத்தில் அனுப்பிவைத்தேன். அப்படி இருக்கையில் ப. பொ. அ. சபையினர் தங்களது உற்பத்திப் பனங்கட்டியினைத்தான் மத்திய கிழக்கிற்கு அனுப்பிவைத்ததாக செய்தி வெளியிட்டிருப்பது ஆச்சிரியமளிக்கிறது.

கடந்த ஒருவருடகாலமாக ப. பொ. அ, சபையினர் என்னிடம் பனங்கட்டியினைப் பெற்று தமது வியாபார ஸ்தாபனமாகிய கற்பகத்தில் விற்பனை செய்துவருகின்றார்கள் என்பதனையும் தங்களது கவனத்திற்கு தருகின்றேன்.

சோ. சிவராசா.

அதிபர்,
ராஜா, தெ. ப.பொ.உ. வி.
தொழிற்சாலை, அல்வாய்.

## இன்று சித்திரைப்பரணி
## வைரவ தோத்திரம்

- ச. தங்கமாமயிலோன் -

கஞ்சுகக் கடவுள் போற்றி
  கனன்றசெஞ் சடையாய் போற்றி
வெஞ்சுடர்ச் சூலா போற்றி
  வேதனைக் கடந்தாய் போற்றி
நெஞ்சுரந் தருவாய் போற்றி
  நிர்க்குண னந்தா போற்றி
வஞ்சகந் தீர்ப்பாய் போற்றி
  வைரவா போற்றி போற்றி

ஒருதலை களைந்தாய் போற்றி
  ஒப்பிலா மணியே போற்றி
வெருதலை களைவாய் போற்றி
  வீரமா மொளியே போற்றி
இருதயத் தமர்வாய் போற்றி
  ஈடிணை யில்லாய் போற்றி
வருமிடர் காப்பாய் போற்றி
  வைரவா போற்றி போற்றி

சேத்திர பாலா போற்றி
  கேடிலா விறைவா போற்றி
தோத்திர ரூபா போற்றி
  தூயமா தவமே போற்றி
பூத்துணர் புனிதா போற்றி
  பூதநா யகனே போற்றி
மாதிரிய னந்தா போற்றி
  வைரவா போற்றி போற்றி

புத்தொளி யானாய் போற்றி
  பூவொலி புனிதா போற்றி
பத்தருக் கெளியாய் போற்றி
  பரசுரு கரத்தாய் போற்றி
சித்திகந் தருள்வாய் போற்றி
  சித்தனே அரியாய் போற்றி
மத்துவன் மைந்தா போற்றி
  வைரவா போற்றி போற்றி

# வாழும்பொழுதேகலைஞர்களை வாழ்த்திக் 'கௌரவிப்போம்'

## பாராட்டுவிழாவில் சி. வி. வேலுப்பிள்ளை

(வெள்ளவத்தை)

'வாழும் பொழுதே கலைஞர்களை வாழ்த்திக் கௌரவிக்க வேண்டும். இருக்கும் பொழுது ஒருவரை பாராட்டாமல் இறந்த பின்பு பாராட்டுவதோ அல்லது மலர் வளையம் வைப்பதோ அழகல்ல, கலைஞன் உயிர்வாழும் பொழுதே திறமை சாலிகளை கௌரவிக்க வேண்டும்.'

இவ்வாறு மலையக இலக்கிய முன்னோடி திரு. சி வி.வேலுப்பிள்ளை வெள்ளிவிழாக் கலைஞர் திரு வி. முத்தழகுவை பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த கால் நூற்றாண்டில் இசைத்துறையிலீடுபட்டு வரும் பாடகர் வி. முத்தழகுவை பாராட்டி கௌரவிக்குமுகமாக மலையக கலை இலக்கியப் பேரவையினர் ஒட்டல் சாந்தி விஹாரில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு திரு. கே. பாலச்சந்திரன் தலைமை வகித்தார்.

திரு. சி. வி. வேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், 'மலையகம் இன்று மாற்றமடைந்து வந்துள்ளது. உழைக்கும் மக்களாக இருந்த மலைநாட்டார்கள் இன்று பல்வேறு துறைகளில் சாதனை செய்து வருகிறார்கள் பாடகர் வி முத்தழகு தனது இனிமையான குரலால் இசை துறையில் கடந்த கால் நூற்றாண்டாக சேவை செய்து வருகிறார் அவரைப் பாராட்டி கௌரவிப்பது நமது கடமையாகும்' என்றார்.

திரைப்படத் தயாரிப்பாளர் திரு வி. பி. கணேசன் பேசுகையில், 'பாடகர் முத்தழகுவின் இனிமையான குரலை வானொலியில் கேட்ட பின்னர் புதியகாற்று திரைப்படத்தில் பாடவாய்ப்பளித்தேன் இன்று அவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட அதிகமான திரைப்படங்களில் பாடியுள்ளார் ஈழத்து இசைத்துறையில் அவர் சுடர்விட்டு பிரகாசிப்பதற்கு காரணம் அவரின் குரல் வளம் தான் என்றார்.

திரு. வி. கே. நவசோதி பேசுகையில், 'திறமைசாலிகளை பாராட்டி கௌரவிக்க வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினர்க்கு அவர்களைப் பற்றி நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதனால் எழுத்தாளர்கள் கலைஞர்களைப் பற்றிய வரலாறு அச்சில் வெளியிடவேண்டும்' என்றார்.

ஜனாப் மசூர் மௌலானா பேசுகையில் கலைக்கு இன மொழி என்ற வேறுபாடு கிடையாது பாடகர் முத்தழகு தனது இனிமையான குரல் மூலம் லட்சோபலட்ச ரசிகர்களை சம்பாதித்துள்ளார். வானொலியில் அவரின் இனிமையான குரலை கேட்டு மகிழ் பல நாள் வெள்ளிவிழாப் பாடகரான அவர் மேலும் புகழ்பெற வாழ்த்துகிறேன்' என்றார்.

பாடகர் வி முத்தழகுவுக்கு 'மெல்லிசை மன்னர்' என்ற பட்டத்தை வழங்கி பொன்னாடை போர்த்தினார். மலையக கவிஞரும், மூத்த எழுத்தாளருமான திரு சி. வி. வேலுப்பிள்ளை முத்தழகு தனக்களிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றி தெரிவித்தார்.

### ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 நிகழ்ச்சி முன்னோட்டம்

6-01 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]

6-15 சேலிச்சித்திர நிகழ்ச்சி

6-30 உலக தொழில்கள்

7-00 செய்திமஞ்சரி (தமிழ்)

7-15 உலக பறவைகள் நிகழ் 1

7-45 சிங்கள நிகழ்ச்சி

8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்)

9-00 சிங்களத் திரைப் படம்

9-30 செய்திமஞ்சரி (ஆங்கிலம்]

9-45 சிங்கள திரைப்பட தொடர்ச்சி

பருத்தித்துறை ஐ. தே. க. வேட்பாளர் கொலை

## இளைஞர் குருநகரில் மீண்டும் விசாரிக்கப்பட்டார்!

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை ஐ தே. கட்சி முதலாவது வேட்பாளர் கே. வி. இரத்தினசிங்கத்தின் கொலைதொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட பருத்தித்துறை கிராமோதய சபை உறுப்பினர் சொக்கலிங்கம் விஜயராசா என்ற இளைஞர் மீண்டும் கடந்த ஞாயிற்றுக் கிழமை குருநகர் முகாமிற்கு அழைக்கப்பட்டிருந்தார். பின்னர் சில மணித்தியாலங்களின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

விஜயராசா ஏற்கனவே இரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு குருநகர் முகாமில் வைத்து இரண்டு தினங்களாக விசாரணை செய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது

யாழ். மாவட்டத்திலுள்ள

## சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கு யோசனை

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கும் 560 சனசமூக நிலையங்களுக்கும், அதாவது 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் ஒரேஒரு மேற்பார்வை உத்தியோகத்தர் கடமையாற்றிவருவது சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கும், ஊக்குவிப்புக்கும் பெரும் குறையாக இருந்து வருகிறது எனவே யாழ் மாவட்டத்திற்கு குறைந்தது ஐந்துபேராவது சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவேண்டும்".

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச ஒன்றியம் பிரதமஅமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

சனசமூக நிலையங்களின் வளர்ச்சிகள் தொடர்பான வேறு பல தீர்மானங்களையும் இந்த ஒன்றியம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளது.

சனசமூகநிலையங்களின் ஒன்றிய செயலாளர் திரு. சி கிருபராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக இந்த தீர்மானங்களை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளார் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச நிலத்தில் சனசமூகநிலையங்களின் ஒன்றியத்திற்கு நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைத்துதருமாறும், இந்த ஒன்றியத்திற்கு நிரந்தர அலுவலக ஊழியர் ஒருவரை நியமித்துத் தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இயங்கும் சனசமூகநிலையங்களின் சமாசங்களையும் தனியாகப் பதிவு செய்யவேண்டும் என்றும், யாழ் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து சனசமூக நிலையங்களின் சமாச ஒன்றியத்திற்கு வருடா வருடம் விசேட நிதி ஒதுக்கப்படவேண்டும் என்றும் அத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

LANKA CEMENT LIMITED
இலங்கை சீமேந்து லிமிட்டெட்
காங்கேசன்துறை
பழுதுபட்ட வெற்று சீமேந்து பைகள்
விற்பதற்கான கேள்விப்பத்திரம்
20,000 மேற்பட்ட பழுதுபட்ட பைகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
இவற்றை விற்பதற்கான கேள்விப்பத்திரங்கள்
18-5-83 திகதி மாலை 3 மணிக்கு முன்
கிடைக்கக்கூடியதாக
கணக்காளர், இலங்கை சீமேந்து லிமிட்டெட்
என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்,
இவ்வெற்றுப் பைகளை 14-5-83 திகதி
சனிக்கிழமை மாலை 3 மணி வரை
எமது களஞ்சியத்தில் பார்வையிடலாம்.
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் 1000 மேற்பட்ட பைகள் விற்பனைக்கு விடப்படும்.
கணக்காளர்,
இலங்கை சீமேந்து லிமிட்டெட்
காங்கேசன்துறை. [7207]

பலாலி கொலைவழக்கு:

## ஆறு சந்தேகநபர்களும் பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

பலாலி கொலைச் சந்தேக நபர்கள் ஆறு பேரும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அப்பீல் நீதிமன்றம் அனுமதியளித்தது இவர்கள் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்செய்யப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பலாலியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜரத்தினம் அல்லது கண்ணன் என்பவர் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கணபதிப்பிள்ளை தேவராஜா, சின்னத்தம்பி நவரத்தினம் அல்லது இரத்தினம், கணபதிப்பிள்ளை செல்வராஜா, கணபதி பிள்ளை அர்ச்சுனன் அல்லது இந்திரன், கணபதிப்பிள்ளை இராஜதுரை, ஆறுமுகம் சோதிலிங்கம் ஆகிய 6 சந்தேக நபர்கள் மல்லாம் நீதிபதியால் மாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்

இவர்களைப் பிணையில் விடுமாறு ஏற்கனவே யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டது அச்சமயம் இவர்களைப் பிணையில் விட பொலிஸ்தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது மனுவை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி மனுவை நிராகரித்திருந்தார்

இதையடுத்து அப்பீல் நீதிமன்றத்தில் மேற்படி பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. சட்டத்தரணி எஸ். தவராஜா இதனை தாக்கல் செய்து சந்தேகநபர்களை பிணையில் விடுமாறு வாதிட்டார். அப்பீல் நீதிமன்றம் மனுவை ஏற்று சந்தேகநபர்களை தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கலாம் என தெரிவித்தது.

இதனையடுத்து ஆறு சந்தேகநபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்டனர் அச்சமயம் ஆறு பேரையும் தலா1000ரூபா உறுதிப்பிணையில் செல்ல நீதிபதி திரு. சிவக்கனேஸ்வரன் அனுமதித்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், வி என். நவரத்தினம், ஆர். ஈ தம்பிரத்தினம், எஸ் ஸ்ரீதரன், திருமதி கமலா சொர்ணலிங்கம் ஆகியோர் ஆஜராகினர், வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் மு திருநாவுக்கரசு, சோ தேவராஜா ஆகியோர் ஆஜராகினர். (கி)

### கிராமோதய சபைத்தலைவர்

(மன்னார்)

எருக்கலம்பிட்டி கிராமோதய சபைத் தலைவராக 4 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று ஆசிரியர் ஜனாப். எம். எம். இபுருகிம் தெரிவுசெய்யப்பட்டார்

தேசிய ஹிஜ்ரா சபையின் எருக்கலம்பிட்டி கிளை தலைவரான இவர் சிறந்த சமூக சேவையாளராவார்.

### மீண்டும் பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆயுர்வேத கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து மீண்டும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்

புதிய நிர்வாக சபையை உருவாக்கக்கோரி இவர்கள் மீள் பரீட்சையையும் வகுப்புக்களையும் பகிஷ்கரித்து வருவதாகத் தெரிகிறது.

பிரச்னைகளை நேரில் கவனிப்பார்

## விவசாய அதிகாரசபை தலைவர் மன்னார் விஜயம்

(மன்னார்)

விவசாய அதிகாரசபைத் தலைவர் திரு ரஞ்சன் விஜயரத்தின இம்மாதம் 21ஆம் திகதி மன்னார்மாவட்டத்திற்கு விஜயம் செய்வார்

இரண்டு தினங்கள் மன்னார் மாவட்டத்தில் தங்கிநிற்கும் விவசாய அதிகார சபைத் தலைவர் மன்னார் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்து விவசாயம் தொடர்பான பிரச்னைகளை நேரில் பார்வையிடுவார்.

இவருடன் மன்னார் எம். பி. திரு. பி எஸ் சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகளும் மன்னார் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் செல்வார்கள்.

## "இயங்காத கழகங்களை நிறுத்திவைக்க வேண்டும்"

(மன்னார்)

"மன்னார் பகுதியில் இயங்காத நிலையிலுள்ள விளையாட்டுக் கழகங்களை, கிராமோதய சபைகளில் அங்கம் வகிக்காதவண்ணம் நிறுத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை மன்னார் உதவி அரசாங்க அதிபர் மேற்கொள்ளவேண்டும்."

இவ்வாறு மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு பி எம். செபமாலை தெரிவித்தார்.

மன்னார் விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டி விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படவுள்ள விளையாட்டுப்போட்டிக்கு முன்னோடியாக நடைபெற்றது.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் கூறியதாவது:

"மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல சிறந்த விளையாட்டுக் கழகங்கள் இருந்தபோதிலும் இவ்விளையாட்டுப் போட்டியில் 4 விளையாட்டுக் கழகங்கள் மட்டுமே கலந்துகொண்டது கவலைக்குரியதாகும்.

விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்கள் பங்குகொள்வது அவசியமாகும்.

## காங்கேசன்துறை உப அலுவலகத்துக்கு

# ரூ. 1 லட்சமாக அதிகரிக்க அபிவிருத்திசபை அங்கீகாரம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தின் மாதாந்த செலவினத்தை ஒரு லட்ச ரூபாவாக அதிகரிக்க யாழ் அபிவிருத்திச்சபை நிறைவேற்றுக்குழு அங்கீகரித்துள்ளது.

காங்கேசன்துறை உப அலுவலக மாதாந்த செலவினத்திற்காக முன்னர் 50 ஆயிரம் ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த அலுவலகம் பெரிய பகுதியை கொண்டிருப்பதாலும், 50 ஆயிரம் ரூபா பணத்துடன் மக்களது தேவைகளை நிறைவேற்ற முடியாதிருப்பதாலும் இதனை அதிகரிக்க வேண்டுமென உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் யாழ் அபிவிருத்திச்சபையினரை வற்புறுத்தியிருந்தார்.

இதன்பயனாக மேற்படி உப அலுவலகத்தின் மாதாந்த செலவினத்தை ஒரு லட்ச ரூபாவாக அதிகரித்து வழங்க அபிவிருத்திச்சபை நிறைவேற்றுக்குழு அங்கீகரித்துள்ளது.

கடந்த மாதம் மூலம் இந்த அதிகரிப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை எம். பி. சுகவீனம்

(புலோலி)

பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவரும் திரு துரைரத்தினம் குணமடைந்துவருகிறார். இவரை ஓய்வெடுக்குமாறு வைத்திய நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

## "அபிவிருத்தியின் அவசியம் பற்றி பத்திரிகைகள் மக்களுக்கு விளக்க வேண்டும்"

### அமைச்சர் அல்விஸ் கூறுகிறார்

(கொழும்பு)

"நாட்டை அபிவிருத்தி செய்யும் அவசியம் பற்றி பத்திரிகைகள் பொதுமக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பணியாற்றுபவர்கள் அதன் அடிப்படை அம்சங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும்" ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸுக்கு கலாநிதி பட்டம் வழங்கப்பட்டமையைப் பாராட்டி இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பாராட்டு வைபவத்தில் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். (வெ)

## வவனியாவில் கூட்டணியின் 2வது பிரசாரக் கூட்டம்

(வவனியா)

வவனியா நகரசபை கூட்டணியினரின் இரண்டாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் வரும் 12-ம் திகதி பண்டாரிகுளத்தில் நடைபெறவுள்ளது.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் தலைமையில் பிரசாரக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு நீலன் திருச்செல்வம், திரு. வி. பொன்னம்பலம் உட்பட பல கூட்டணிப் பிரமுகர்கள் இங்கு பேசவுள்ளனர்.

## மயிலிட்டி கடற்றொழில் சங்கத்துக்குபுதிய அலுவலகம்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கத்திற்கென புதிய அலுவலகம் ஒன்று மயிலிட்டி சந்திக்கருகாமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு. ம. தங்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா வைபவத்தில் அபிவிருத்திச்சபைகாங்கேசன்துறைஉபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்துவைத்தார்.

மேற்படி விரிவாக்கசேவைச் சங்கம் கடற்றொழில் அபிவிருத்தியில் மட்டுமல்லாது மீனவர்களது மற்றும் பிரச்னைகள் குறைகளை தீர்த்துவைக்கும் பணியில் ஈடுபடவேண்டுமெனவும் மீனவர் கிராமங்களில் அமைதி சமாதானம் நிலவ வழிவகுக்கவேண்டுமெனவும் திரு க. சண்முகநாதன் இங்கு பேசுகையில் கூறினார்.

மற்றும் சங்க காப்பாளர்களான திரு க. வி. துரைசாமி, திரு. சி பொன்னுச்சாமி, திரு. பி. செல்வநாயகம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

### இலங்கையில் பனம்பொருள் அபிவிருத்தி

# தமிழக நிபுணர் பொறுப்பேற்றார்!

(புலோலி)

தமிழகப் பனம்பொருள் நிபுணரும், தமிழ்நாடு மாநில அரசு பனை வெல்லம் மற்றும் நுப்பு விற்பனைக்கூட்டுறவு இணையச் சிறப்பு அலுவலருமான டாக்டர் கே. சம்பந்தம் இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் விசேட கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரையின் வேண்டுகோளைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசாங்கம் பனம்பொருள் நிபுணர் டாக்டர் கே. சம்பந்தத்தை இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

டாக்டர் கே சம்பந்தம் தற்போது பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் ஆறுமாத காலம் யாழ்ப்பாணத்தில் தங்கிப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்தித் துறையிலான அபிவிருத்தித் திட்டத்தைத் தனது நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்துவார்.

அவர் இங்கு கடமையாற்றும் ஆறு மாத காலமும் இலங்கை அரசின் ஆலோசகர் என்ற அந்தஸ்துடன் தனது பணிகளை மேற்கொள்ளுவார். பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையின் ஏற்பாட்டின்படி இப்பதவியைப்பொறுப்பேற்ற டாக்டர் சம்பந்தம் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு கே. நடராசாவின் ஆக்கபூர்வமான உற்பத்தித் திட்டங்களைச்செயற்படுத்துவதில் இணைந்து செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பனைத்தொழில் சம்பந்தமாகப் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு உள்ள டாக்டர் சம்பந்தம் கடந்த வருடம் அக்டோபர் மாதம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அழைப்பின்பேரில் இலங்கை வந்து இருந்தார். கடந்தபெப்ரவரி மாதம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஐ. நா. சபையின் உலக உணவு விவசாய நிறுவனமும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்திய சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மகாநாட்டிலும் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### காங்கேசனில் குடிநீர்விநியோகஸ்தம்பிதம்:

# உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தத் தீர்மானம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பகுதியில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக குடிநீர் விநியோகம் ஸ்தம்பிதமுள்ளதையும், அது குறித்து மாவட்ட அபிவிருத்திச் சபை பாராமுகமாக இருப்பதையும் கண்டித்து காங்கேசன்துறை உப அலுவலக முன்றலில் அமைதி வழியில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்த வலி வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி வடக்கு பிரதேச சபைக் கூட்டம் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பிரதேசசபைத் தலைவர் திரு. எஸ் சிவமகாராஜா தலைமையில் நடைபெற்ற சமயமே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறை கிராமோதய சபைத்தலைவர் திரு நா. கருணானந்த சிவத்தால் கொண்டுவரப்பட்டு நிறைவேறிய மேற்படி தீர்மானம் தெரிவிப்பதாவது;

காங்கேசன்துறை பட்டினப் பகுதிக்கு நீர் விநியோகம் செய்யப் பயன்படுத்தப் பட்ட உழவு யந்திரமும், நீர்தாங்கியும் பழுதுற்று 8 மாதங்களாகியும் அதனை திருத்தி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இதுவரை முயற்சி எடுக்கப்படவில்லை. இதற்கு மாவட்ட அபிவிருத்தி சபையின் பாராமுகமே காரணமாகும். இதனை பல தடவை பிரதேச சபையின் கவனத்திற்கு காங்கேசன்துறை கிராமோதய சபை கொண்டுவந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குடிநீரின்றி இப்பகுதி மக்கள் சொல்லொணா கஷ்டத்தை அனுபவிக்க நேரிடுகிறது. ஆகவே இப்பிரச்சனையை 2 வாரத்திற்குள் தீர்க்காது விட்டால் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பாராமுகத்தை கண்டித்து காங்கேசன்துறை உப அலுவலகம் முன்பாக அமைதி வழியில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை கிராமோதய சபையினரும் பொது மக்களும் இணைந்து நடத்துவார்கள்.

இதற்கு ஏனைய கிராமோதய சபைகளினதும் ஆதரவு கோரப்பட்ட சமயம் அந்த கிராமோதய சபைகளின் தலைவர்களும் ஆதரவு நல்குவதாக தெரிவித்தனர்.

இது குறித்து உடனடியாக மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## 'ஈஸ்வராம்பா 'தினம்'

(புலோலி)

பருத்தித்துறை - மந்திகை பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா சமித்தியில் பகவானின் தாயாரை நினைவு கூருமுகமாக "ஈஸ்வரம்பா தினம்" கொண்டாடப்பட்டது.

அன்றையதினம் "பாலவிகாஸ்" மாணவ மாணவிகளின் பஜனையும், ஆராதனைகளும் இடம்பெற்றன. திரு பஞ்சநதம் ஐயர் சிறப்புரை வழங்கினார்.

கடந்த 8ம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி சமித்தியில் நடைபெற்ற "ஈஸ்வரம்பா" விழாவில் பருத்தித்துறை மந்திகை சமித்தியினரும் கலந்துகொண்டனர்.


# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8 - 30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7 - 45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-**

(1) ஹோம்பினன்ஸ் லிமிட்டெட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ்மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி;
தொலை பேசி இல: 22273. சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:**

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 468, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி- 4-10 7-00
சனி. ஞாயிறு 1-30
லவகுசா

**ஹரன்** (யாழ் நகர்)
தினசரி 5 காட்சிகள்
**Blood Line**
(color)

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
13-5-83 வரை
தில்லு முல்லு


## கூட்டணிப் பிரமுகர் தெரிவு

(மன்னார்)

மன்னார் இலுப்பைக் கடவை கிராமோதய சபைத்தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் திரு வி முத்துலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார்.

இலுப்பைக் கடவை இந்து இளைஞர் சங்கத் தலைவரான இவர் சிறந்த சமூகத் தொண்டராவார்.

## ஐ. வி. கழகம் வெற்றி

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டி பதினெட்டு வி. கழகங்களுக்கிடையில் ஐந்து நாட்களாக நடைபெற்றது.

கிளிநொச்சித் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வீ ஆனந்தசங்கரி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சித்தன் குறிச்சி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 78 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், வில்லடி வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆரியம் பொத்து உதய விளையாட்டுக் கழகம் இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றன.

ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் திரு பொ. ஸ்ரீஸ்கந்தராஜா கழகத் தலைவர் திரு. இ இராமச்சந்திரன் ஆகியோர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். [மா]

## புதிய நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை திருமகள் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் நிலையத் தலைவர்: திரு நா.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற சமயம்; பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: டாக்டர் நா. சத்திவேல், உபதலைவர் திரு. த நடராஜா; செயலாளர்: திரு. ந. செல்வச்சந்திரன்; உப-செயலாளர்: திரு பொ. நந்தகுமார், பொருளாளர்: திரு சி கிருஷ்ணானந்தன், கணக்கு பரிசோதகர்: திரு. நா.ஆனந்தராஜா.

## இகவாழ்வின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் சிவசம்பந்தத்தோடு அருள்நெறி வாழ்க்கையை வாழ்ந்தோமானால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் வீடுபேறு இயல்பாகவே நமக்குக் கிடைத்துவிடும். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று துறைகளைப்பற்றியும் கூறிய திருவள்ளுவர் வீடு என்னும் மோட்சம்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை இகவாழ்வின் பயனே வீடடைதல் என்னும் குறிக்கோளில் வள்ளுவர் வீடுகுறித்த-மோட்சம் - குறித்த கருத்துக்களை கூறாமல் விட்டுவிட்டார்'' என்று கூறினார்.


**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்


பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற

# பழையபதிவேடுகள் அழிக்கப்படும்!

[புலோலி]

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள பெறுமதியற்ற பழைய பதிவேடுகளும் மறுசாதனங்களும் ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்குப் பின் அழிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன் முடிவுற்ற குற்றவியல் வழக்குகள் பணம் அறவிடுதல் தொடர்பான வழக்குகள் மனநோயாளர் தொடர்பான வழக்குகள், விசாரணை முற்றுப்பெற்ற பிட்டிசங்கள் ஆகிய பெறுமதியற்ற பழைய பதிவேடுகளும் மறுசாதனங்களுமே ஆவணி மாதம் 31ம் திகதிக்குப் பின்னர் அழிக்கப்படவுள்ளன.

இவ்வழக்குகள் பதிவேடுகள் ஆகியனவற்றில் அக்கறை உடையோர் ஆவணி மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது முறைப்படி உறுதிப்படுத்தப் பட்ட பெட்டி சங்கள் மூலமாகவோ சம்பந்தப்பட்ட வழக்குகள் பதிவேடுகள் ஏன் அழிக்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பின் சமர்ப்பிக்கும் படி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு ரீ யோகநாதன் அறிவித்துள்ளார். [க]

## பதுக்கியிருந்த சிமெந்து பறிமுதல் செய்யப்பட்டது!

(மன்னார்)

மன்னாரிலுள்ள பிரபல வர்த்தகநிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 135 பை சிமெந்து மன்னார் விலைக்கட்டுப் பாட்டுப் பரிசோதகர் களால் பறிமுதல் செய்யப்பட்டது.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து பிரபல வர்த்தக நிலையத்திற்குச் சென்ற மன்னார் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் திரு. எம். ஏரம்ப மூர்த்தி. ஜனாப் எம் ஏ. சி. எம் றசீன், திரு குணரத்தினம் ஆகியோரே பதுக்கி வைத்திருந்த சிமெந்தினைப் பறிமுதல் செய்தனர்.

இத்துடன் சிமெந்து விற்பனை செய்வதற்கான அனுமதியின்றி விலைகுறிப்பிடாது சிமெந்தினை விற்பனை செய்த தற்காக மேற்படி வர்த்தகர் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## அடம்பனில் கோஷ்டி மோதல்: 30 பேர் கைது!

[மன்னார்]

அடம்பன் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட 30 பேரை இராணுவத்தினர் கைது செய்து மன்னார் பொலிசில் ஒப்படைத்தனர்.

கடந்த வியாழன் இடம் பெற்ற இக்கோஷ்டி மோதலில் அடம்பன் பகுதியைச் சேர்ந்த சிலரும் சாவகச்சேரியைச் சேர்ந்த சிலரும் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட டிராக்டர் ஒன்றின் பற்றுவரவு தொடர்பாகவே இக்கோஷ்டி மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 29-ம் திகதி
வியாழக்கிழமை
(12-5-83)

மேடம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும் திருடர் பயத்திற்கும் இடமுண்டு காணிப் பிணக்கு கவலையைத் தரலாம் விவசாயிகள் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

இடபம்: அடக்கமான நடவடிக்கைகளின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள் முதியவர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார்கள் இறை நம்பிக்கை மேலோங்கும்.

மிதுனம்: சுறுசுறுப்புக் குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும் மனப்பான்மை தென்படும் பொறுமையுடன் நடப்பது நன்று.

கடகம்: தன்மானத்துடன் தனவரவிற்கும் இடமுண்டு குடும்பத்தில் தென்றல் வீசும் உறவினர்கள் படையெடுத்து வருவார்கள் வாகனம் முதலீடு செய்ய உகந்த நாள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள் இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம் பொருள் வரவுக்கு இடமுண்டு.

கன்னி: எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம் எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும் பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும் தனிவழிப் பயணத்தை தவிர்க்கவும் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

துலாம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கலாம் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உற்சாகத்தைத் தரும் சாஸ்திர வழியால் புண்ணியம் சேரும்.

விருச்சிகம்: மிகவும் வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் அவசரம் போக்கினால் ஆபத்துக்கள் விளையும் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம் மின்னியல் பொறியியலில் கவனம் வேண்டும்.

தனு: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்தகருமத்தை முடிப்பதில் வெற்றி அடைவீர்கள் பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

மகரம்: தொழில் துறையில் முன்னேற்றம் தென்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் வணிகத்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும் சிலருக்கு நன்மையான இடமாற்றமுண்டு.

கும்பம்: நிதிநிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படும் வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவீர்கள் புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள் புத்திரர் கல்வி நன்மையுறும்.

மீனம்: பணமுடையத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும் கடற்தொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


**ராணி** தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
13-5-83 வரை
கமலஹாசன் **ராஜபார்வை**
14—19-5-83 உல்லாசப் பறவைகள்
20-5-83 முதல் சகலகலா வல்லவன்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சரத் பாபு, சுஹாசினி
**நெஞ்சத்தைக் கிள்ளாதே**
(கலர்)

வெளியூர் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க திரைப்படக் கூட்டுத்தாபன அனுமதியுடன் இன்னும் சில தினங்கள் மட்டும்
'சங்கிலி' நீடிக்கப்பட்டிருக்கின்றது
**றீகல்** 4-வது ஹவுஸ் புல் வாரம்
(யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, பிரபு, சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா,
**சங்கிலி** சுமித்ரா, மனோரமா
(ஈஸ்ட்மென் கலர்)

**வின்ஸர்** தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
**வண்டிச்சக்கரம்**
(வண்ணக் கலர்)
அடுத்த வெளியீடு IDEAL MARRIAGE

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
கமலஹாசன் - ஜெய்சங்கர் - ஸ்ரீதேவி
நடித்த
**வாழ்வே மாயம்**
(ஈஸ்மன் கலர்)

**சாந்தி** யாழ். நகர் - 12-5-83 முதல் ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் வெள்ளிவிழாக் கொண்டாடிய
வெற்றிப்படைப்பு
சிறந்த கதை - சிறந்த நடிப்பு - சிறந்த பாடல்கள் நிறைந்த உன்னத சித்திரம்
✶ பாலாஜியின்
✶ சிவாஜி ✶ நாகேஷ்
✶ லட்சுமி ✶ மனோரமா
✶ வி கே.ராமசாமி ✶ வாசு
✶ தேங்காய்
**தியாகம்**
நடித்த ✶ இளையராஜா ✶ விஜயன் ஈமன் கலர்

## கமலம் கொலைவழக்கு:

# எதிரிதரப்பு சட்டத்தரணி கிளப்பிய சட்டப்பிரச்னைகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை டியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கு நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆர் பி சபாரத்தினம் இரு ஆட்சேபனைகளை கிளப்பினார்:

ஆரம்ப விசாரணையின் போது பருத்தித்துறை நீதவான், எதிரியிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்த போது இரு தவறுகள் இடம் பெற்றுள்ளன.

[I] குற்றவியல் சட்டக்கோவையின் 150ம் பிரிவு-உபபிரிவு 2ன்படி எதிரியிடம் இருந்து வாக்குமூலம் பெறும் போது, அந்த வாக்கு மூலத்தைப் பெறுவதால் ஏற்படும் பலாபலன்களைப்பற்றி எதிரிக்கு நீதவான் விளக்கிக் கூறியிருக்க வேண்டும்.


[II] இதே சட்டத்தில் 277ம் பிரிவு உப-பிரிவு 2ன்படி எதிரியிடமிருந்து பெற்ற வாக்கு மூலத்தின் முடிவில் அதனை அத்தாட்சிப்படுத்தி நீதவான் தனது கையினால் ஒப்பமிட்டிருக்கவேண்டும்.

''இந்த இரு உப பிரிவுகளுக்கமைய நீதவான் நடந்து கொள்ளவில்லை.

எனவே இவ்விதம் பெறப்பட்ட வாக்குமூலத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.''

இதற்குப் பதிலளித்த அரச சிரேஷ்ட சட்டத்தரணி கே ஜெயக்குமார், இந்தச் சட்டவாதம் குறித்து சட்டமாஅதிபருடன் ஆலோசனை நடத்தி விட்டுத் தமது வாதத்தைச் சமர்ப்பிக்க அவகாசம் தரும்படி கேட்டுக்கொண்டார்.

நீதிபதி மேல்விசாரணையை இன்றுவரை ஒத்திவைத்தார். (மா)



காங்கேசன்துறை துறைமுகத்தில் 6 ஆயிரம் தொன் சிங்கப்பூர் கப்பல் ஒன்று நங்கூரமிட்டிருப்பதைப் படத்தில் காணலாம் லங்கா சிமெந்து லிமிட்டெட் ஸ்தாபனத்தால் கட்டப்பட்டுள்ள துறைமுகப் பகுதியில் இக்கப்பல் நங்கூரமிட்டு பங்களாதேஷிற்குக் கொண்டு செல்ல உப்பு ஏற்றிக் கொண்டிருக்கின்றது

எதிர்காலத்தில் இதுபோன்ற பல பாரிய கப்பல்கள் ஒரே சமயத்தில் இத்துறைமுகத்தில் வந்து நிற்க வசதியேற்படும் என்று மேற்படி ஸ்தாபனப் பிரதிநிதிகள் கூறுகிறார்கள் துறைமுக வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்பொழுது ஒரு பெரிய கப்பல் மாத்திரமே ஒரு சமயத்தில் நங்கூரமிடும் வாய்ப்புள்ளது. துறைமுகம் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டதும் ஏராளமான கப்பல்கள் இங்கு வந்து போகவும் இறக்குமதி ஏற்றுமதிகளில் ஈடுபடவும் முடியும். இதனால் இப்பகுதி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் ஒரு உந்துசக்தி கிடைப்பதாய் இருக்கும்.

# சாட்சிகளில் இருவர்

## நீதிமன்றத்தில் ஆஜர்

### விசாரணை இன்று தொடரும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கில் யாழ் மேல் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு சமூகமளிக்காமலிருந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மூன்று சாட்சிகளில் இருவர் நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இருவரையும் தலா 500ரூபா சரீரப்பிணையில் செல்லும்படியும், ஒழுங்காக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியமளிக்க வேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் சாட்சியமளிக்கவிருக்கும் 27 சாட்சிகளில் 17வது சாட்சியான தேவராசா பெண் யோகேஸ்வரியும், 18வது சாட்சியான செல்லையா மகேந்திரனும், 12வது சாட்சியான நில்லைநடராசா லோகநாதனும் மேல் நீதிமன்றத்தில் சமூகமளிக்காததைத் தொடர்ந்து நீதிபதி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

17வதும், 18வதும் சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசார் கைதுசெய்து நேற்று நீதிபதி முன்பாக ஆஜர்செய்தபொழுது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

12வது சாட்சி வெளிநாடு சென்றுள்ளதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலிசார் இது பற்றி அறிந்து அறிக்கைசமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்

இந்த வழக்கில் 1980 பெப்ரவரி 21, 22ம் திகதிக்குமிடையில் ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரனை பருத்தித்துறை ஆனைவிழுந்தான் மயானத்தில் வைத்துக் கொலை செய்ததாகவும், அவர் அணிந்திருந்த ஐயாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும், ஜிப்சியையும் கொள்ளையடித்ததாகவும் பருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி ராஜ்குமார் அல்லது ராஜன் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது

சிங்களம் தெரிந்த ஜூரிமார் முன்னிலையில் இவ்வழக்கு நடைபெறுகிறது

மேல் நீதிமன்ற பேச்சு மொழிபெயர்ப்பாளர் எஸ் ஏ ஈ. ஏகநாதன் ஜூரி சபையினருக்கும், சிங்களச் சுருக்கெழுத்தாளர்களுக்கும் சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி சபாரத்தினம், சட்டத்தரணிகள் ரீ லிங்கராசா, ஏ. தெய்வேந்திரன், எஸ். சிவகடாட்சம், ரி துரைராஜசிங்கம், திருமதி குலநாயகி ரஞ்னபாலா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்

அரசதரப்பில் அரசசிரேஷ்ட சட்டத்தரணி க ஜெயக்குமார், சட்டத்தரணி குருசெட் தம்பையாவின் அனுசரணையுடன் ஆஜரானார்

மேல் விசாரணை இன்று தொடரும். [மா]

## யாழ். செயலக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் அரசாங்க அதிபர், இது தொடர்பாக மேலிடத்தில் தொடர்பு கொண்டு அவர்களின் அனுமதி கிடைத்ததும் அது பற்றி அறிவிப்பதாகத் தெரிவித்தார். [மா]

## ஐ. தே. க.வுடன் தொடர்பில்லையாம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாம் எதுவித அரசியல் தொடர்புகளும் வைத்திருக்கவில்லையென்று யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைச் சேர்ந்த திரு க. பொன்ராசா தெரிவித்துள்ளார்

1979ம் ஆண்டு நடைபெற்ற யாழ். மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில்தான் போட்டியிட்ட போதிலும், அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அரசியல் ரீதியாகவோ, உத்தியோக பூர்வமாகவோ ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதுவித உறவும் வைத்துக்கொள்ளவில்லை என திரு பொன்ராசா அறிவித்துள்ளார். (மா)

## சிறுபான்மைத் தமிழர் பிரச்னை இன்று மாநாடு

[யாழ்ப்பாணம்]

சிறுபான்மைத் தமிழர் குறைபாடுகள் குறித்து நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இன்று பிற்பகல் தூதுக்குழுவொன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது

வதிரி அபிவிருத்தி நிறுவனத் தலைவர் திரு மூ சி சீனித்தம்பி தலைமையில் செல்லும் இத் தூதுக்குழுவினர், சிறுபான்மைத் தமிழர் சமூகம் முன்னேறுவதற்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை குறித்து வலியுறுத்தவுள்ளனர். (மா)

## தமிழ்க் காங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை தேர்தலை ஒத்திவைக்குமாறும், அல்லது தேர்தலுக்கு முன் அடுத்த விசாரணையை நடத்துமாறும், அல்லது வாக்குச்சீட்டில், கூட்டணியின் பெயரைத் நீக்குமாறும் கேட்டுக்கொண்டார். இவற்றை நீதியரசர்கள் நிராகரித்தனர்

தேர்தலுக்குபின் மாற்று ஒழுங்குகள் ஏதாவது செய்ய முடியுமா? என நீதியரசர்கள் கேட்டபோது இது விகிதாசாரத் தேர்தல் முறையாகவிருப்பதால், அதில் பெரும் சிக்கல் இருப்பதாக சட்டத்தரணி சிவா தெரிவித்தார்

நீதியரசர்கள் விசாரணையை இம்மாதம் 31ம் தேதிக்கு ஒத்திவைத்தனர் (இ)

## அரசுக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயொழிய எதுவித கருத்து வேறுபாடுகளும் ஏற்பட இடம்வைக்கக் கூடாது'' என்று குறிப்பிட்ட திரு யோகேஸ்வரன், எங்களுக்கு இடையில் கருத்துவேறுபாடுகள் குறித்து நடைபெறும் பேச்சுவார்த்தையில் எங்கள் மீது தவறு காணப்படுமிடத்து எங்கள் வழியை மாற்றிக் கொள்ள முடிவு செய்வோம் என்று உறுதியளித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

''தமிழர் விடுதலைக் கூட்டணி தான் தமிழ் மக்களுக்கு விடுதலைத் தேடிக் கொடுக்கும் ஒரே ஒரு இயக்கம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு பொதுச்சபை-பாராளுமன்றக்குழு கூடித்தான எந்த ஒரு முடிவையும் எடுத்துவருகிறது.

''ஆடிமாதம் 21ம் திகதியுடன் எனது பிரதிநிதித்துவப்பதவு முடிவடைகிறது எங்களுக்கு மக்கள் அளித்த ஆதரவால்தான் நான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் எனது பதவிக்காலம் முடியும்வரை மட்டுமல்ல அதற்குப் பின்னரும் என்னைச் சார்ந்த இயக்கத்துக்கும் மக்களுக்கும் விசுவாசமாக உழைத்து வருவேன்.

இளைஞர்கள் சக்திக்கு மதிப்பளித்து வருபவர்களில் நானும் ஒருவன். அவர்களுக்கு தீங்கு விளைவிக்கப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனதுவீடு எரிக்கப்பட்ட போதுதான் உமாமகேஸ்வரனின் வீடும் எரிக்கப்பட்டது அப்பொழுது கூட உமாமகேஸ்வரனின் பெற்றோர் தங்கள் வீடு எரிக்கப்பட்டதாக என்னிடம் முறையிட்டபோது நான் அந்த நேரத்திலும் கூட இராணுவ முகாமுக்குச் சென்று ஏன் எரித்தீர்கள் என்று கேட்டேன். நான் எம் பி. என்ற பதவி காப்பிலிருந்தபடியால் தான் அப்படிக் கேட்கக் கூடியதாக இருந்தது.

''வெவ்வேறு விடயங்களுக்காக இளைஞர்கள் எம்முடன் மோதிக்கொண்டாலும், ஆட்சியாளர்கள் எங்களை எள்ளி நகையாடுவதர்கள் அதற்கு ஒருபோதும் இடம்வைக்கக் கூடாது.

''தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சேவை ஆற்றக்கூடிய வகையில் பகிர்ந்து கொடுத்துள்ளோமே தவிர பதவியைக் கூறுபோடவில்லை

''இத்தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டியேற்பட்டால் ஒரு சிங்கள ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ்தான் மாநகர சபைகள் இயங்கவேண்டி ஏற்படும் அப்பொழுது எங்கள் சாக்கடைகளை நாங்களே கழுவவேண்டிய சூழ்நிலை வரும்.

மற்றும் யாழ் மாநகரசபை வேட்பாளர்களை திரு. பெ. ஜேக்கப், திரு. செ. அமிர்தநாதன், திரு வே ஆலையா ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (மா)

## நவரத்தினராஜா மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

குருநகர் இராணுவ முகாமில் மரணமான கிளிவெட்டியைச் சேர்ந்த நவரத்தினராஜாவின் மரண விசாரணைத் தீர்ப்பு இன்று யாழ். நீதிமன்றத்தில் வழங்கப்படவுள்ளது (மா)

## ராஜசுந்தரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு அறைக்கு டாக்டர் ராஜசுந்தரத்தைக் கொண்டுபோவதைக் கண்டேன். அவர் மெலிந்து காணப்பட்டார் நடக்க முடியாத நிலையில் இருந்தார். அவருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவரை வேறிடத்திற்கு மாற்றவேண்டும்.'' (க)

## கவுணவத்தை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞர்கள் எதிர்மனுதார் சார்பில் மு. யோககுமாரின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. குமரகுரு ஆஜரானார். [க]

## 9 அரசியல்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பற்றுக்குறைவிடயத்தில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தத் தவறிவிட்டதாகவும் தெரிவித்து இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது

மதுரையில், மத்திய அரசு அலுவலகத்தின் முன் பாகமறியல் செய்த தமிழ்நாடு காந்தி காமராஜ் கட்சித் தலைவர் திரு ப நெடுமாறன், திரு. கே தங்கமணி உட்பட 400 பேர் கைது செய்யப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு குணரத்தினம்

யாழ்ப்பாண தொலைபேசித் திணைக்களத்தில் கடமையாற்றுபவரும் கோப்பாய் தெற்கு ''துளசி'' இல்லத்தில் வசிப்பவருமான சின்னப்பு குணரத்தினம் காலமானார். இவர் பவளத்தின் அன்புக் கணவரும், கற்பகத்தின் அன்பு மகனும், சாந்தி, சுபதாஸ் யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), குகதாஸ் அவர்களின் அன்புத் தந்தையும், யாழ். வலய கல்வி டிப்ளோமா பயிற்சி ஆசிரியர் தம்பையாவின் அன்பு மாமனும், கஜனி, ஜனகன் ஆகியோரின் பேரனும், நவரத்தினத்தின் மைத்துனரும், கிருஷ்ணரின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி ப 3 மணியளவில் இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 7215

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.